792

# மீனாட்சி
# தமிழ்வாசகம்

இரண்டாம்
புத்தகம்

25 MAR 1955
MADRAS
792
T3
031(20
N54
133752

First Edition, Sep. 1954.

T.B
031/20
N54

133252
சென்னை-600 008.

Printed at the B. N. Press, Mount Road, Madras.

# முன்னுரை

இரண்டாம் வகுப்பு மாணவர்கள் சிறு சொற்களால் அமைந்த எளிய வாக்கியங்களைப் படிக்கும் ஆற்றல் பெற்றிருப்பர். எனவே, ஒவ்வொரு விஷயத்தைப் பற்றியும் சில எளிய வாக்கியங்களே கொண்ட பாடங்கள் முதலில் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றை முதல் புத்தகத்தின் தொடர்ச்சி என்றே கருதலாம். இவற்றைப் படித்துப் பழகியபின் கற்குமாறு சற்றுப் பெரிய வாக்கியங்களைக் கொண்ட பாடங்கள் தரப்பட்டுள்ளன.

உரையாடல்களை மாணவர் விரும்பிக் கற்பாராதலின், பல பாடங்கள் உரையாடல்களாகவே அமைக்கப்பட்டுள்ளன. பெரும்பான்மையான பாடங்கள் மாணவர்களின் சூழ்நிலையில் காணப்படும் பொருள்களைப் பற்றியவையே. மொழிநூல்களில் மொழிப் பயிற்சியே முதன்மையாக இருக்க வேண்டுமாதலின், மாணவர்களுக்குத் தெரிந்த விஷயங்களைப் பற்றிய பாடங்களே மொழிப் பயிற்சிக்கு ஏற்றவை என்பது கருதி இவ்வாறு செய்யப்பட்டுள்ளது. பாடங்களை ஊக்கத்துடன் படிப்பதற்கு ஏற்றவாறு பல படப் பயிற்சிகளும் கதைகளும் எளிய பாட்டுக்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

நூலாசிரியர்.

# தமிழ்நாடு

1. எண்டிசையும் ஒளிமிகுந்த
எங்கள் தமிழ்நாடு!
ஏந்திழையார் கற்பின்மிக
ஏற்றங் கொண்ட நாடு.
தண்டமிழைச் சங்கம் வைத்து
தான் வளர்த்த நாடு.
தமிழிசையே அமுதிசையாய்த்
தனி சிறந்த நாடு.

2. வள்ளுவர் கம்பர் ஔவை
வாழ்ந்த தமிழ்நாடு.
வான்புகழ மூவேந்தர்
வகுத்த தமிழ் நாடு.
வெள்ளைமனப் பண்புடைய
வீரர் எங்கும் மேவி
வெற்றிக்கொடி நாட்டியநம்
வேளாண்மை நாடு.

3. இல்லை யென்று வந்தவர்க்கே
இல்லையென்னு நாடு.
எவ்வுலகும் வாணிபஞ்செய்
இணையில்லாத நாடு.
பல்கலைகள் செல்வமெல்லாம்
படைத்த தமிழ்நாடு.
பாரெங்கும் பேரோங்கும்
பண்டைத் தமிழ்நாடு.

வி. சு. நடராஜன்.

# பொருளடக்கம்


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | படப் பயிற்சி–I | ... | 6 |
| 2. | படப் பயிற்சி–II | ... | 7 |
| 3. | பசு | ... | 8 |
| 4. | ரோஜா | ... | 9 |
| 5. | அவயவங்கள் | ... | 10 |
| 6. | தொழிலாளர் | ... | 11 |
| 7. | மயில் | ... | 12 |
| 8. | வினுவிடைப் பழக்கம் | ... | 13 |
| 9. | தாயார் | ... | 14 |
| 10. | தகப்பனுர் | ... | 15 |
| 11. | சூரியன்–சந்திரன் | ... | 16 |
| 12. | தென்னை மரம் | ... | 17 |
| 13. | நாள், வாரம், மாதம் | ... | 19 |
| 14. | பள்ளி விளையாட்டுக்கள் | ... | 21 |
| 15. | பிராணிகளிடம் அன்பு (பாட்டு) | ... | 23 |
| 16. | யானை | ... | 24 |
| 17. | படப் பயிற்சி–III | ... | 26 |
| 18. | காலையில் துயிலெழு | ... | 27 |
| 19. | வௌவால் | ... | 29 |
| 20. | குருவிக்கூடு | ... | 32 |
| 21. | சிறுவனின் உதவி | ... | 34 |
| 22. | உழைப்பு | ... | 37 |
| 23. | ஓநாயும் ஆட்டுக் குட்டியும் | ... | 40 |
| 24. | தபால்காரர் | ... | 44 |
| 25. | நாய் (பாட்டு) | ... | 47 |
| 26. | நாணயங்கள் | ... | 48 |
| 27. | கோவில்கள் | ... | 52 |
| 28. | பள்ளிக்கூடம் போதல் | ... | 56 |
| 29. | படப்பயிற்சி–IV | ... | 60 |
| 30. | பூந்தோட்டம் | ... | 61 |
| 31. | கிளி (பாட்டு) | ... | 64 |
| 32. | சுத்தம் சோறு போடும் | ... | 65 |
| 33. | நான்கு திருடர்கள் | ... | 69 |
| 34. | கிராம அதிகாரிகள் | ... | 73 |
| 35. | வேடிக்கைப் பாடல்கள் | ... | 78 |
| | ஆத்திசூடி—உலகநீதி | ... | 79 |

# 1. படப் பயிற்சி—I

ஒவ்வொரு படத்தையும் பார்த்து ஒரு வாக்கியம் எழுது.



# 2. படப் பயிற்சி—II



**மேலே இருக்கும் படத்தில் நீங்கள் காண்பவைகளை ஒவ்வொன்றாய்ச் சொல்லுங்கள்.**

---

குறிப்பு:—முதலில் ஒவ்வொரு பையனையும் படத்திலுள்ளவைகளில் ஒன்றை மட்டும் கூறச் சொல்லவும். பிறகு உயிருள்ளவைகளையும், அசையாப் பொருள்களையும் தனித்தனியாயும், கடைசியாய் எல்லாவற்றையும் கூறச்சொல்லவும்.



# 3. பசு

இது ஒரு பசு.

இதற்குக் கால்கள் நான்கு.

கொம்புகள் இரண்டு உண்டு.

வாலின் நுனியில் மயிர் இருக்கும்.

பசு புல்லைத் தின்னும்.

இது அசைபோடும் பிராணி.

பசு பால் கொடுக்கும்.

பால் மிகவும் சுவை உள்ளது.

பசு வீட்டில் வளரும் பிராணி.



# 4. ரோஜா

இது ஒரு ரோஜா மலர்.

ரோஜா மிகவும் அழகுள்ளது.

ரோஜா நல்ல மணமுள்ளது.

ரோஜாவில் இரண்டு வகை உண்டு.

அவை: வெள்ளை, சிவப்பு.

ரோஜாச் செடியில் முள் உண்டு.

ரோஜா இதழ்கள் மெதுவாக இருக்கும்.

ரோஜா மாலை அழகாய் இருக்கும்.



# 5. அவயவங்கள்

தலையால் வணங்குகிறோம்.
கண்ணால் பார்க்கிறோம்.
காதினால் கேட்கிறோம்.
மூக்கினால் வாசனை அறிகிறோம்.
வாயினால் பேசுகிறோம் ;
சாப்பிடுகிறோம்.
கையால் எழுதுகிறோம்.
விரல்களால் பொருள்களை
எடுக்கிறோம்.
கால்களால் நடக்கிறோம்.



# 6. தொழிலாளர்

குலாலர் மண் பாண்டம் செய்கிருர்.

தச்சர் மரத்தை அறுக்கிருர்.

தட்டார் நகைகள் செய்கிருர்.

கன்ஞர் பித்தளே வேலே செய்கிருர்.

சேணியர் துணி நெய்கிருர்.

கொத்தர் வீடு கட்டுகிருர்.

வேளாளர் வயல் உழுகிருர்.

செம்படவர் மீன் பிடிக்கிருர்.



# 7. மயில்

மயில் மிகவும் அழகான பறவை.

அதற்கு நீண்ட வால்சிறகு உண்டு.

அதைத் தோகை என்கிறோம்.

ஆண் மயிலின் தோகை நீளமானது.

தோகையில் பல நிறங்கள் உண்டு.

அவை: பச்சை, நீலம், மஞ்சள், கறுப்பு.

மயில் தோகையை விரித்து ஆடும்.

மயில் தோகை விசிறி கட்ட உதவும்.

மலை நாடுகளில் மயில் அதிகம்.

## 8. வினு விடைப் பழக்கம்

கீரை கீரை, — அறைக் கீரை
என்ன அறை? — பொன் அறை
என்ன பொன்? — பசும் பொன்
என்ன பசு? — வீட்டுப் பசு
என்ன வீடு? — மர வீடு
என்ன மரம்? — பலா மரம்
என்ன பலா? — வேர்ப் பலா
என்ன வேர்? — வெட்டி வேர்
என்ன வெட்டி? — விறகு வெட்டி
என்ன விறகு? — மா விறகு
என்ன மா? — நெல்லு மா
என்ன நெல்? — சம்பா நெல்
என்ன சம்பா? — முத்துச் சம்பா
என்ன முத்து? — கொட்டைமுத்து
என்ன கொட்டை?—புளியங்கொட்டை
என்ன புளி? — பழம் புளி
என்ன பழம்? — மாம் பழம்
என்ன மா? — அம்மா.



# 9. தாயார்

இவர் என் தாயார்.
என்னிடம் அதிக அன்பு உள்ளவர்.
நான் குழந்தையாய் இருந்தபோது
பால் கொடுத்து வளர்த்தவர்.
எனக்குத் தாலாட்டுப் பாடியவர்.
நான் கேட்ட பொருளைத் தந்தவர்.
நான் நோயில்லாமல் வளர, தான்
மருந்து உண்டவர்.
நான் நல்ல பிள்ளையாய் வளரும்படி
பழக்கம் செய்தவர்.
நான் தாயின் சொற்படியே நடப்பேன்.
தாயே மேலான தெய்வம்.



# 10. தகப்பஞர்

இவர் என் தகப்பஞர்.
இவர் எனக்கு உணவும் உடையும்
கொடுப்பவர்.
எனக்கு விளையாட்டுப் பொருள்களும்
புத்தகங்களும் தருபவர்.
எனக்குப் புத்தி சொல்பவர் இவரே.
நான் நல்ல பிள்ளை ஆக வழி
சொல்பவரும் இவரே.
நான் நன்ருய்ப் படித்து மேன்மை
அடைய நினைப்பவரும் இவரே.
தாய் தந்தையரே கண்கண்ட
தெய்வங்கள்.
தகப்பஞர் சொற்படி நட.





# 11. சூரியன்—சந்திரன்

காலையில் சூரியன் உதிக்கும்.
நடுப்பகலில் சூரியன் உச்சிக்கு வரும்.
மாலையில் சூரியன் மறையும்.
பிறகு சந்திரன் உதிக்கும்.
சூரியன் வெப்பமான ஒளி தரும்.
சந்திரனின் ஒளி வெப்பமாய் இராது.
சூரியன் என்றும் ஒரே அளவாய்
இருக்கும்.
சந்திரன் என்றும் ஒரே மாதிரி இராது.
சூரியன் ஒளியால் சுத்தம் ஏற்படும்.
சூரியன் கிழக்கே உதித்து,
மேற்கே மறையும்.



## 12. தென்னை மரம்

இதோ பார், தென்னை மரம். இதற்குக் கிளைகள் இல்லை; ஆனால் மட்டைகள் உண்டு. தென்னை மரத்தில் தேங்காய் காய்க்கும்.

இளந்தேங்காய் இளநீர் எனப்படும். முற்றின காய் நெற்று எனப்படும். வெயில் காலத்தில் இளநீர் குடிக்கலாம். தேங்காய் மிகவும் சுவையுள்ளது. தென்னை இலைக்கு ஓலை என்று பெயர். ஓலைகளால் கீற்றுகள் பின்னலாம். தென்னை மட்டையை அடுப்பில் எரிக்கலாம். தேங்காய் மட்டையால் கயிறு பின்னலாம். தென்னை மரம் செங்குத்தாய் அதிக உயரம் வளரும். இதன் ஒவ்வொரு பாகமும் உபயோகமுள்ளது.

## புதுச்சொற்கள்

| | | |
|---|---|---|
| மட்டை | இளநீர் | முற்றின |
| நெற்று | ஓலை | கீற்று |
| செங்குத்தாய் | | |

## பயிற்சி

I விடை எழுது :

1. இளந்தேங்காய்க்கு என்ன பெயர் ?
2. தென்னையின் இலைக்கு என்ன பெயர் ?
3. தென்னை ஓலைகளை என்ன செய்யலாம் ?

II கோடிட்ட இடங்களில் தகுந்த சொற்களைச் சேர்த்துப்படி :—

1. முற்றின தேங்காய்——— எனப்படும்.
2. தேங்காய் மட்டையால்——— பின்னலாம்.
3. தென்னை மரம் அதிக——— வளரும்.

## 13. நாள், வாரம், மாதம்

சூரிய உதயம் முதல் சூரிய அஸ்தமனம் வரை பகல்.

சூரிய அஸ்தமனம் முதல் சூரிய உதயம் வரை இரவு.

ஒரு பகலும் ஒரு இரவும் சேர்ந்தது ஒருநாள்.

ஏழு நாட்கள் கொண்டது ஒரு வாரம்.

வாரத்தின் நாட்களைக் கிழமைகள் என்பார்கள்.

ஏழு கிழமைகளுக்கும் பெயர்கள் உண்டு.

அவை : ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி.

முப்பது நாட்கள் கொண்ட காலம் ஒரு மாதம்.

ஒரு மாதத்தின் நாட்களுக்குத் தேதி என்று பெயர்.

பன்னிரண்டு மாதங்கள் கொண்ட காலம் ஒரு வருஷம் அல்லது ஓர் ஆண்டு.

ஒரு வருஷத்தின் பன்னிரண்டு மாதங்களுக்கு நம் முன்னோர் வைத்த பெயர்களாவன:

| | | | |
|---|---|---|---|
| சித்திரை, | வைகாசி, | ஆனி, | ஆடி, |
| ஆவணி, | புரட்டாசி, | ஐப்பசி, | கார்த்திகை, |
| மார்கழி, | தை, | மாசி, | பங்குனி. |

இவை தமிழ் மாதங்கள் என்று சொல்லப்படும். ஆங்கில மாதங்கள் பன்னிரண்டு உள்ளன.

அவை வருமாறு :

| | | | |
|---|---|---|---|
| ஜனவரி, | பிப்ரவரி, | மார்ச்சு, | ஏப்பிரல், |
| மே, | ஜூன், | ஜுலை, | ஆகஸ்டு, |
| செப்டம்பர், | அக்டோபர், | நவம்பர், | டிசம்பர். |

### புதுச்சொற்கள்

| | | |
|---|---|---|
| உதயம் | கிழமை | பன்னிரண்டு |
| அஸ்தமனம் | மாதம் | வருஷம் |
| வாரம் | தேதி | ஆண்டு |
| முன்னோர் | ஆங்கில | சொல்லப்படும் |

### பயிற்சி

1. தமிழ் மாதங்களின் பெயர்களை வரிசை யாகச் சொல்லு.
2. ஜூன் மாதத்துக்கு முன் மாதம் எது? பின் மாதம் எது?
3. இன்றைக்கு உரிய தமிழ் மாதம், தேதி, ஆங்கில மாதம், தேதி ஆகியவற்றைத் தெரிந்துகொள்.



# 14. பள்ளி விளையாட்டுக்கள்

(உரையாடல்)

சேகர் : கமலா ! இங்கே, வா. இந்தத் துலாப் பலகையில் விளையாடுவோம்.

கமலா : எனக்குப் பயமாயிருக்கிறது. விழுந்து விடுவேன் போலிருக்கிறது.

சேகர் : விழமாட்டாய். பலகையை நன்றாகப் பிடித்துக் கொள்.

கமலா : சேகர் ! வேகமாக ஆட்டுகிறாயே ! சற்று மெல்ல ஆட்டு.

சேகர் : மெல்லத்தான் ஆட்டுகிறேன். நீ பயப்படாமலிரு. சற்றுப் பின்னே விலகி உட்கார்.

கமலா : இதில் ஆடினது போதும். சறுக்குப் பலகையில் சறுக்குவோம், வா.

சேகர் : நீ முதலில் சறுக்கு. நான் உன்னைப் பிடிக்க வருகிறேன்.

**கமலா : இதில் எனக்குப் பழக்கம் அதிகம். உன்னால் என்னைப் பிடிக்கமுடியாது.**

**சேகர் : நீ வேகமாகச் சறுக்குகிறாயே! உன்னைப் பிடிப்பது முடியாதுதான்.**

### புதுச்சொற்கள்

| | | |
|---|---|---|
| துலாப்பலகை | விலகி | பழக்கம் |
| சறுக்குப்பலகை | மெல்ல | முடியாது |

### பயிற்சி

1. *படத்தில் பிள்ளைகள் விளையாடும் விளையாட்டுக்கள் என்ன ?*
2. *உனக்குத் தெரிந்த வேறு விளையாட்டுக்களில் மூன்று சொல்லு.*

# 15. பிராணிகளிடம் அன்பு

ஓடி விளையாடு பாப்பா—நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா
கூடி விளையாடு பாப்பா— ஒரு
குழந்தையை வையாதே பாப்பா. 1

சின்னஞ்சிறு குருவிபோல—நீ
திரிந்து பறந்துவா பாப்பா
வன்னப் பறவைகளைக் கண்டு—நீ
மனத்தில் மகிழ்ச்சி கொள்ளு பாப்பா. 2

கொத்தித் திரியும் அந்தக் கோழி—அதைக்
கூட்டி விளையாடு பாப்பா
எத்தித் திருடும் அந்தக் காக்காய்—அதற்கு
இரக்கப் படவேணும் பாப்பா. 3

வண்டி இழுக்கும் நல்ல குதிரை—நெல்லு
வயலில் உழுது வரும் மாடு
அண்டிப் பிழைக்கும் நம்மை ஆடு—இவை
ஆதரிக்க வேணுமடி பாப்பா. 4

—பாரதியார்



## 16. யானை

நிலத்தில் வசிக்கும் விலங்குகளில் யானை மிகவும் பெரியது. இதன் முகத்திலிருந்து நீளமாய்த் தொங்குவது தும்பிக்கை. இந்தத் தும்பிக்கையினுல் அது மூச்சுவிடும்; தண்ணீரை உறிஞ்சிக் குடிக்கும்; கனமான பொருள்களையும் எளிதில் தூக்கும். தும்பிக்கையினுல் சிறு நாணயத்தைக்கூட அது எடுத்துவிடும்.

யானையின் மண்டை பெரியது. ஆனுல் கழுத்துக் குறுகி இருக்கும். அதன் உடல் மிகவும் பருத்து இருக்கும். இந்தப் பருத்த உடலைத் தாங்குவதற்குத் தடித்த தூண்கள்போல்

நான்கு கால்கள் உண்டு. யானையின் காது முறம்போல் இருக்கும். அதன் கண்கள் மிகவும் சிறியவை.

யானை சுறுசுறுப்பான பிராணி அல்ல. அசைந்து அசைந்து நடக்கும். அது இலை, தழை, கரும்பு இவற்றை விரும்பித் தின்னும்.

அதற்கு ஞாபக சக்தி அதிகம். ஆண் யானையின் வாயின் இரண்டு பக்கங்களிலும் வெண்மையாய் நீண்டு இருப்பது தந்தம். அது மிகவும் விலையுள்ளது. 'யானை இருந்தாலும் ஆயிரம் பொன், இறந்தாலும் ஆயிரம் பொன்.'

### புதுச்சொற்கள்

| | | |
|---|---|---|
| விலங்கு | தொங்குவது | தும்பிக்கை |
| மூச்சுவிடும் | உறிஞ்சி | எளிதில் |
| நாணயம் | மண்டை | குறுகி |
| தடித்த | முறம் | சுறுசுறுப்பான |
| விருப்பத்துடன் | ஞாபகசக்தி | தந்தம் |

### பயிற்சி

I விடை எழுது :—

1. தும்பிக்கையினால் யானை என்ன செய்யும்?
2. யானையின் காது எப்படி இருக்கும்?
3. யானையின் உணவு என்ன?

II கோடிட்ட இடங்களில் தகுந்த சொற்களைச் சேர்த்துப்படி :

1. யானையின் மண்டை ——.
2. ஆண் யானையின் வாயிலிருந்து இரண்டு பக்கங்களிலும் நீண்டு இருப்பது ——.
3. யானையின் கால்கள் தடித்த —— போலிருக்கும்.

# 17. படப் பயிற்சி--III

[தைரியமுள்ள சேகர்]



சேகரும் அவன் தங்கையும் தெருவில் நின்று கொண்டிருந்தார்கள். அப்போது ஒரு நாய் அவர்களைக் கடிக்க ஓடிவந்தது. சேகர் தன் தங்கையை எப்படிக் காப்பாற்றினான்? படத்தைப் பார்த்துக் கதையைச் சொல்லு.

## 18. காலையில் துயிலெழு

தகப்பனுர் :—குழந்தாய், என்ன செய்கிருய் ?

மகன் :—அப்பா! நான் பாடம் படிக்கிறேன்.

தகப்பனுர் :—நீ என்ன பாடம் படிக்கிருய்?

மகன் :—நான் தமிழ்ப்பாடம் படிக்கிறேன்.

தகப்பனுர் :—குழந்தாய் ! இப்பொழுது தானு படிக்க ஆரம்பித்தாய்?

மகன் :—ஆம், அப்பா! இப்பொழுதுதான் ஆரம்பித்தேன்.

தகப்பனுர் :—நீ காலையில் எழுந்து இந்நேரம் வரை என்ன செய்தாய்?

மகன் :—அப்பா! சூரியன் உதிக்கும் முன் எழுந்திருந்தேன். ஆனுலும் தூக்கம் தெளியவில்லை. பிறகு கொஞ்சம் தூங்கினேன்.

தகப்பனுர் :—குழந்தாய்! தூங்கி எழுந்த பின் மறுபடியும் படுத்து உறங்கலாமா? அது சோம்பேறித்தனம் அல்லவா?

மகன் :—இனிமேல் அப்படித் தூங்கவில்லை அப்பா!

தகப்பனார் :—நீ காலையில் எழுந்ததும் பல் விளக்கி, கை, கால் சுத்தம் செய்து கொண்டு படிக்க ஆரம்பித்தால் சுறுசுறுப்பு உண்டாகும். தூக்கம் வராது.

மகன் :—அப்படியே செய்கிறேன், அப்பா!

### புதுச்சொற்கள்

| | | |
|---|---|---|
| ஆரம்பித்தாய் | இந்நேரம் | தூக்கம் |
| தெளியவில்லை | மறுபடியும் | உறங்கலாமா |
| சோம்பேறித்தனம் | பல் | விளக்கி |

### பயிற்சி

I விடை எழுது:—

1. காலையில் விழித்தவுடன் என்ன செய்ய வேண்டும்?

2. சோம்பேறித்தனம் என்றால் என்ன?

II கோடிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களைச் சேர்த்துப் படி :—

1. காலையில் எழுந்ததும் ——— விளக்க வேண்டும்.

2. கை கால் சுத்தம் செய்து கொண்ட பிறகு ——— வேண்டும்.



## 19. வௌவால்

இது ஒரு வௌவால். வௌவால் பறக்கும் பிராணி. இதன் முகம் எலியின் முகத்தைப் போல் இருக்கும். இதன் தேகத்தில் மெல்லிய உரோமங்கள் உண்டு. இது விலங்குகளைப் போல் குட்டி போட்டுப் பால் கொடுக்கும். விலங்குகளுக்கு இருப்பதுபோல் இதன் வாயில் பற்கள் இருக்கும். ஆகையால் இது பறவை அல்ல.

வௌவாலுக்கு இரண்டு இறக்கைகள் உண்டு. இவைகள் பறவைகளுக்கு இருப்பது போல் பல இறகுகளாக இல்லை; மெல்லிய தோலால் அமைந்திருக்கும். இந்த இறக்கையின் நடுவில், மெல்லிய குடைக் கம்பிகள் போன்ற எலும்புகள் உண்டு. அவைகளின் உதவியால் வௌவால் தன் இறக்கைகளைக் குடைபோல் சுருக்கவும் விரிக்கவும் முடியும்.

வௌவாலின் கால்கள் மெலிந்து குட்டை யாய் இருக்கும். கால்களில் நீண்டு வளர்ந்த நகங்கள் உண்டு. இந்த நகங்களின் உதவியால் வௌவால் தலைகீழாகத் தொங்கும். நிற்கவும் நடக்கவும் அதனால் முடியாது. வௌவால் பண்டங்களின் வாசனையை நன்ருய் அறியும். காதுகள் நீளமாக இருப்பதனுல் இது சிறு ஒலியையும் கேட்கும்.

வௌவால் பகலில் மரங்களிலும் வீட்டுக் கூரைகளிலும் கோவில்களிலும் இருட்டான இடங்களிலும் தொங்கிக்கொண்டு இருக்கும். இரவில் இரை தேடச் செல்லும்.

வௌவால்களில் வீட்டு வௌவால், பழம் தின்னி வௌவால் என இரண்டு வகை உண்டு. வீட்டு வௌவால் ஈ, கொசு முதலிய வைகளைத் தின்னும். ஆடு மாடுகள் தூங்கும் போது, அவைகளின் உடலில் தன் கூர்மை யான பற்களை அழுத்தி இரத்தத்தை உறிஞ்சிக் குடிக்கும். பழம் தின்னி வௌவால் மரங்களில் உள்ள பழங்களையே தின்று வாழும். இது பெரியதாயிருக்கும்.

புதுச்சொற்கள்

| | | |
|---|---|---|
| உரோமங்கள் | சுருக்கு | விரிக்க |
| பண்டங்கள் | அழுத்தி | மெலிந்து |

## பயிற்சி

I விடை எழுது:

1. வௌவாலை ஏன் பறவை என்று சொல்லக் கூடாது?

2. வௌவாலின் இறக்கைகள் எப்படி இருக்கும்?

3. வௌவால் எப்பொழுது இரை தேடச் செல்லும்?

4. வௌவாலின் உணவு என்ன?

II பின் வருபவைகளில் முதல் வரிசையிலுள்ள சொற்களுக்குப் பொருத்தமான சொல்லை இரண்டாம் வரிசையிலிருந்து எடுத்து எழுது:

| | |
|---|---|
| வௌவால் | பூச்சி |
| புறு | விலங்கு |
| சிலந்தி | பறவை |



# 20. குருவிக் கூடு

(உரையாடல்)

மணியன் : ராமா ! இதோ பார். என் மேஜையைச் சுத்தமாக வைத்துவிட்டுப் போனேன். இப்பொழுது ஒரே குப்பை !

ராமன் : வைக்கோலும் புல்லுமாக இருக்கிறதே !

மணியன் : யார் செய்திருப்பார்கள் இப்படி ? என் தம்பியாகத் தானிருக்கும்.

ராமன் : அசடே, மேலே பார். அங்கே என்ன தெரிகிறது ?

மணியன் : உத்திரக் கட்டையில் ஒரு பிடி வைக்கோல் இருக்கிறது. அருகே, இரண்டு குருவிகள் உட்கார்ந்திருக்கின்றன.

ராமன் : அவைதான் இப்படிச் செய்திருக்கின்றன.

மணியன் : குருவிகள் அங்கே என்ன செய்கின்றன ?

ராமன் : வைக்கோலும் புல்லும் கொண்டு அவை கூடு கட்டுகின்றன. அவற்றில் கொஞ்சம் மேஜைமேல் விழுந்திருக்கின்றது.

மணியன் :வீட்டில் குருவி கூடு கட்டுமா ?

ராமன் : சில குருவிகள் வீட்டில் கூடு கட்டும். இவை வீட்டுக் குருவிகள்.

மணியன் : கூட்டைப் பிரித்துப் போட்டு விடுவோமா ?

ராமன் : வேண்டாம், மணியா. அவை இருந்துவிட்டுப் போகட்டும். நாம் மேஜையை வேறிடத்தில் போட்டுக் கொள்ளலாம்.

### புதுச்சொற்கள்

| | | |
|---|---|---|
| சுத்தமாக | வைக்கோல் | உத்திரக்கட்டை |
| குப்பை | அசடு | பிரித்து |

### பயிற்சி

*1. நீ பார்த்திருக்கிற பறவைக் கூடுகளில் இரண்டு சொல்லு.*

*2. பறவைகள் ஏன் கூடு கட்டுகின்றன ?*

# 21. சிறுவனின் உதவி

வேலூரில் ஓர் ஏழைக் குடியானவன் இருந்தான். அவனுக்கு முருகன் என்ற மகன் உண்டு. தகப்பன் மகனை நல்ல வழியில் பழக்கி வந்தான். அவனைப் பலரும் புகழ்வதைக் கண்டு மகிழ்ச்சி அடைந்தான்.



ஒரு நாள் முருகன் கடைத் தெருவழியாய் வந்து கொண்டிருந்தான். ஒரு கிழவி கூடை நிறையப் பழங்களைச் சுமந்து கொண்டு



வந்தாள். சில கெட்ட பிள்ளைகள் அவளைத் தொடர்ந்து சத்தம் செய்து கொண்டு வந்தார்கள். வெயில் வேளையாய் இருந்ததால் மர நிழலில் தன் கூடையை இறக்கிக் கிழவி கீழே உட்காரப் போனாள். பின்னால் நின்ற ஒரு

பையன் தன் கையில் இருந்த கற்களைக் கூடையின் மேல் எறிந்தான். கூடை சாய்ந்து பழங்கள் கீழே விழுந்து சிதறின.



கூடவந்த சிறுவர்கள் கீழே விழுந்த பழங்களை எடுக்க ஆரம்பித்தார்கள். அதைப் பார்த்த கிழவி அழ ஆரம்பித்தாள். உடனே முருகன் அங்கே ஓடி வந்து, "பாட்டி அழாதே. நான் பழங்களைப் பொறுக்கித் தருகிறேன் " என்று சொன்னான். கிழவி, " அப்பா! நான் வயதானவள் ; என்ன செய்வேன்? இந்தப் பழங்கள் முழுவதையும் விற்றால் எனக்கு எட்டணாக் கிடைக்கும். இப்படிப் பழங்கள் பாழா



ஞல், இன்று என் பிழைப்பு என்ன ஆகும்?'' என்ருள். முருகன், விழுந்த பழங்களைப் பொறுக்கி, மண்ணைத் துடைத்துவிட்டுக் கூடையில் போட்டான்.

கிழவி அவன் உதவி செய்ததைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்தாள். அதன் பிறகு, "அப்பா! நீ நல்ல குழந்தை. நீ இவ்வளவு நேரம் எனக்காகச் சிரமப்பட்டாயே. இந்தா! இதைச் சாப்பிடு'' என்று இரண்டு பழங்களைக் கொடுத்தாள்.

### புதுச்சொற்கள்

| | | |
|---|---|---|
| குடியானவன் | மகிழ்ச்சி | தொடர்ந்து |
| சிதறின | பொறுக்கி | வயதானவள் |
| பிழைப்பு | பாழாஞல் | |

### பயிற்சி

I விடை எழுது :—

1. கிழவியின் பழக்கூடை ஏன் கீழே விழுந்தது?
2. பழங்கள் கீழே விழுந்ததும் கெட்ட பையன்கள் என்ன செய்தார்கள்?
3. முருகன் கிழவிக்கு எப்படி உதவி செய்தான்?

II கீழேயுள்ள வாக்கியங்களில் தவறுகளைத் திருத்தி எழுது :—

1. பழங்கள் விழுந்து சிதறியது.
2. கிழவி அழ ஆரம்பித்தான்.
3. முருகன் பழங்களைக் கூடையில் போட்டது.



## 22. உழைப்பு

ஈ :— சிறுவனே ! நீ எங்கே போகிருய்?

சிறுவன் :— நான் பள்ளிக்கூடம் போகிறேன்.

ஈ :— குளிர்ந்த காற்றும், அழகான இளம் வெயிலும் இருக்கும் இந்தச் சமயத்தில் என்னைப் போல் சந்தோஷமாய் விளையாடு. ஏன் வீணுகப் பள்ளிக்கூடம் போகிருய் ?

சிறுவன் :— புத்திகெட்ட ஈயே ! நான் வீணுகவா பள்ளிக்கூடம் போகிறேன் ? விளையாடும் நேரத்தில் விளையாட வேண்டும் ; வேலை செய்யும் நேரத்தில் வேலை செய்ய

வேண்டும். நாள்முழுவதும் விளையாடினால் நம் வேலையை யார் செய்வார் ?

ஈ :— உனக்கு என்ன வேலை? நீ படிக்கும் பையன்; உனக்கு அதிகத் தொந்தரவு இல்லை. நான் மகிழ்ச்சியோடு உலாவி வரும் போதே உணவும் தேடிக் கொள்கிறேன். உன்னால் இது முடியாதோ ?

சிறுவன் :— நான் உன்னைப்போல் இருக்கமாட்டேன்.

ஈ :—போ! போ! நீ எறும்பு முட்டாளுக்குத் தகுந்த நண்பன். உன்னோடு நான் பேசக் கூடாது. அதோ எறும்பும் வருகிறது. நான் போகிறேன்.

எறும்பு :— அப்பா! குழந்தாய்! இங்கே ஈ ஒன்று என்னவோ பேசிக்கொண்டிருந்ததே? அது எங்கே ?

சிறுவன் :— எறும்பே! நீ அதற்கு பகைவனும். உன்னைக் கண்டதும் அது ஓடிவிட்டது.

எறும்பு :— பாவம்! அது என்ன செய்யும்! மழைக்காலம் வருமே, வந்தால் உணவுக்கு அலைய வேண்டி வருமே, என்று நான் வேலை செய்கிறேன். உணவு சேர்க்க வேண்டிய நாட்களாகிய வெயில் காலத்தில் சுறுசுறுப்பாய் உழைக்கிறேன். அதனால் வேலை செய்ய முடி

யாத மழைக்காலத்தில் போதுமான உண வுடன் என் புற்றில் மகிழ்ச்சியாய் இருக்கிறேன். ஆனால் ஈயோ வேலையே செய்யாமல் திரிகிறது. அதனால் மழைக் காலத்துக்குள் இருந்த இடம் தெரியாமல் மறைந்து போகிறது. உனக்கு எது நல்லதாகத் தோன்றுகிறதோ அதன்படி நட.

சிறுவன் :—எறும்பே ! நீ செய்வதே நல்ல தாகத் தோன்றுகிறது. நான் உன்னைப் போலவே சுறுசுறுப்பாய் உழைப்பேன். இதோ நான் பள் ளிக்கூடம் போகிறேன்.

எறும்பு :— சரி ! போய்வா.

புதுச்சொற்கள்

| | | |
|---|---|---|
| சந்தோஷமாய் | வீணாக | புத்திகெட்ட |
| முழுவதும் | தொந்தரவு | முட்டாள் |
| என்னவோ | பகைவன் | அலையவேண்டி |
| வெயில்காலம் | புற்று | திரிகிறது |
| உழைப்பேன் | மழைக்காலம் | |

பயிற்சி

I விடை எழுது :—

1. ஈ பையனை என்ன செய்யச் சொல்லிற்று ?
2. எறும்பு எவ்வாறு சுறுசுறுப்பாக இருக் கிறது ?
3. பையன் எந்தப் பிராணியைப் போல் இருக்க எண்ணினான் ?

II பின்வரும் சொற்களில் உள்ள தவறுகளைத் திருத்தி எழுது:—

எரும்பு ; பல்லிக்கூடம் ; அளகான ; வீனாக; உளைக்கிறேன்.

## 23. ஓநாயும் ஆட்டுக்குட்டியும்

தென் தேசத்தில் ஒரு அடர்ந்த காடு இருந்தது. அக்காட்டின் நடுவே ஆறு ஒன்றில் தண்ணீர் ஓடிக்கொண்டு இருந்தது. அப்போது வெயில் காலம். ஆதலால், அக்காட்டிலுள்ள மிருகங்கள் ஆற்றில் தண்ணீர் குடிக்க வருவது வழக்கம்.



ஒரு நாள் இரைதேடி அலைந்த ஓநாய் ஒன்று அங்கு வந்து தண்ணீர் குடித்துக் கொண்டிருந்தது. அச்சமயம் அங்கு ஒரு

ஆட்டுக்குட்டி தண்ணீர் குடிக்க வந்தது. அது ஓநாயைக் கண்டு பயந்து, கீழ்ப் பக்கத்தில் சென்று ஒரு ஓரத்தில் தண்ணீர் குடித்தது. ஓநாய் அதைக்கண்டதும், " இதோ! நமக்குச் சரியான உணவு கிடைத்துவிட்டது. இதை எப்படியாவது கொன்று தின்னவேண்டும் " என்று தனக்குள் எண்ணியது.

பிறகு ஓநாய் சிறிது நேரம் தண்ணீர் குடித்துவிட்டு, ஆட்டுக்குட்டியைப் பார்த்து,

(பாட்டு)

*நான் குடிக்கும் நல்ல நீரை ஆட்டுக்குட்டியே—நீ ஏன்*
*நான்கு காலால் கலக்குகிறாய்? ஆட்டுக்குட்டியே !*

என்று கேட்டது. அதைக் கேட்ட ஆட்டுக் குட்டி மிகவும் பயந்து நடுங்கி,

(பாட்டு)

*ஐயையோ நான் என்னசெய்தேன் ஓநாய் ஐயாவே-இந்த*
*ஆற்று நீரைக் கலக்கவில்லை ஓநாய் ஐயாவே !*
*நீர் குடித்த மிச்சமன்றோ ஓநாய் ஐயாவே—நான்*
*நின்று கீழே குடிக்கின்றேன் ஓநாய் ஐயாவே !*

என்று கூறியது. ஆட்டுக்குட்டி சொல்லியது உண்மையாக இருந்தும், ஓநாய் அதை எப்படியும் கொல்ல நினைத்து,

(பாட்டு)

போன வருடத்தி லேன் ஆட்டுக்குட்டியே—என்னைப்
போக்கிரித்தனமாய் வைதாய் ஆட்டுக்குட்டியே !

என்றது. அதைக் கேட்ட ஆட்டுக்குட்டி,

(பாட்டு)

போன வருடத்தில் நான் ஓநாய் ஐயாவே—இந்தப்
பூமியில் பிறக்கவில்லை ஓநாய் ஐயாவே !
இரண்டே மாதம் நான் பிறந்து ஓநாய் ஐயாவே—உம்மை
எப்படி நான் வைதிருப்பேன் ஓநாய் ஐயாவே !

என்று சொல்லியது. அதற்கு ஓநாய்,

(பாட்டு)

உன் தாயே வைதிருக்கும் ஆட்டுக்குட்டியே—அதற்கு
உன்னைத்தானே கொன்றிடுவேன் ஆட்டுக்குட்டியே !

என்று கூறி, ஆட்டுக்குட்டியை அறைந்து கொன்று தின்றது. பொல்லாதவர் சிறிதும் பொருத்தமில்லாமல் நீதி பேசித் தம் எண்ணத்தை நிறைவேற்றிக்கொள்வார்கள். ஆகையால்,

தீயவரைக் கண்டால் தூர விலகு.

புதுச்சொற்கள்

| | | |
|---|---|---|
| மிருகங்கள் | அலைந்த | சரியான |
| கலக்குகிறாய் | மிச்சம் | அன்றோ |
| போக்கிரித்தனம் | வைதாய் | போனவருடம் |
| பொல்லாதவர் | நிறைவேற்றி | தீயவர் |

## பயிற்சி

I விடை எழுது :—

1. ஆட்டுக்குட்டியைக் கண்ட ஓநாய் என்ன நினைத்தது ?
2. "நீ ஏன் நீரைக் கலக்கினாய் ?" என்று ஓநாய் கேட்டதற்கு ஆட்டுக்குட்டி என்ன சொல்லியது ?
3. "போன வருடத்தில் என்னை ஏன் வைதாய் ?" என்று ஓநாய் கேட்டதற்கு ஆட்டுக்குட்டி என்ன கூறிற்று ?

II கீழேயுள்ள சொற்களில் கோடிட்ட இடங்களில் சரியான எழுத்துக்களை அமைத்து எழுது:---

ஓ — ய் ; ஆ — டுக்குட் — ; இர — டு; எ — ணம்.



## 24. தபால்காரர்

கண்ணப்பன் :—அப்பா! அதோ போகிருரே, அவர் இந்தக் கடிதத்தை உங்களிடம் கொடுக்கச் சொன்ஞர். அவர் யார் ?

தகப்பஞர் :—கண்ணப்பா! அவர் தபால் காரர். இது எனக்கு வந்த கடிதம். அதஞல் தான் என்னிடம் தரச் சொன்ஞர்.

கண்ணப்பன் :—அப்பா! இது உங்களுக்கு வந்தது என்று அவர் எப்படித் தெரிந்து கொண்டார்?

தகப்பஞர் :—இதோ பார்! இதில் என் விலாசம் போட்டிருக்கிறது. நீயே படி.

**கண்ணப்பன்:**—எங்கே பார்ப்போம். (படிக்கிறான்). ஏன் அப்பா! இது எங்கிருந்து வந்திருக்கிறது?

**தகப்பனார்:**—இந்தக் கடிதம் சென்னைப் பட்டினத்திலிருந்து வந்திருக்கிறது. இதை உன் மாமா எழுதியிருக்கிறார்.

**கண்ணப்பன்:**—சென்னைப் பட்டினத்தில் இருந்து என்றைக்கு எழுதியிருப்பார்?

**தகப்பனார்:**—நேற்றுத்தான் எழுதியிருக்கிறார். இதோ பார்! தேதி போட்டிருக்கிறது.

**கண்ணப்பன்:**—அப்பா! இந்த மாதிரி இவர் கடிதம் கொண்டுவந்து கொடுப்பதற்கு நாம் கூலி கொடுக்கவேண்டாமா?

**தகப்பனார்:**—நாம் இவரிடம் கூலி கொடுக்க வேண்டியதில்லை. தபால் ஆபீசில் பணம் கொடுத்து கார்டு, கவர், தலை முதலியவைகளை வாங்குகிறோம் அல்லவா? அதிலிருந்து இவருக்கு மாதச் சம்பளம் கொடுப்பார்கள்.

**கண்ணப்பன்:**—இந்த ஊர் முழுவதும் இவர் கடிதம் கொடுக்க வேண்டுமே! அப்படியானால் இவர் வேலை மிகவும் சிரமம் அல்லவா?

**தகப்பனார்:**—இந்த ஊருக்கு இவரைப் போல் தபால்காரர்கள் பலர் உண்டு. ஆகையால் இவருக்கு வேலை அதிகம் இல்லை.

**கண்ணப்பன் :—இவர்களை எல்லாம் யார் ஏற்படுத்தினார்கள்?**

**தகப்பனார் :—இவர்களெல்லாம் நமது இந்திய சர்க்காரின்கீழ், தபால் இலாகாவில் வேலை செய்கிறார்கள். நமது தேச சர்க்கார் நமக்குச் செய்யும் நன்மைகளில் தபால் இலா காவும் ஒன்று.**

### புதுச்சொற்கள்

| | | |
|---|---|---|
| தபால்காரர் | விலாசம் | என்றைக்கு |
| கூலி | ஆபீசு | கார்டு |
| கவர் | தலை | சம்பளம் |
| சிரமம் | சர்க்கார் | இலாகா |

### பயிற்சி

I விடை எழுது:

1. எந்த வீட்டுக்கு எந்தக் கடிதம் கொடுக்க வேண்டுமென்று தபால்காரர் எப்படித் தெரிந்து கொள்கிறார்?

2. தபால்காரர்களுக்குச் சம்பளம் கொடுக்கப் பணம் எங்கிருந்து கிடைக்கிறது?

3. தபால் இலாகா யாரால் நடத்தப்படுகிறது?

II கோடிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களைச் சேர்த்துப்படி :

1. தபால் ஆபீசில் ——— கொடுத்து கார்டு வாங்குகிறோம்.

4. தபால் இலகாவை நமது இந்திய ——— நடத்துகிறார்கள்.



## 25. நாய்

வீட்டு வாசல் காப்பவன்
வேட்டையாட வல்லவன்
ஆட்டுக்கிடைப் பாண்டியன்
அன்புமிக்க தோழன் 1

உண்ட சோற்றை எண்ணி
உயிரும் விடத் துணிபவன்
மண்டலத்தில் நாய் போல்
வாய்த்த துணை உண்டோ. 2

—தேசிக விநாயகம் பிள்ளை

(அருஞ்சொற் பொருள்; வல்லவன்—பலமுள்ளவன்; பாண்டியன்—தலைவன். துணிபவன்—மனவுறுதி உள்ளவன். மண்டலம்—பூமி.)



## 26. நாணயங்கள்.

மாணிக்கம் :—அம்மா! நான் கடைக்குப் போய் மிட்டாய் வாங்கவேண்டும். எனக்கு ஒரு அணுக் கொடுங்கள்.

தாயார் :—குழந்தாய்! உனக்கு ஒரு அணுவா வேண்டும்? எவ்வளவுக்கு மிட்டாய் வாங்கப் போகிருய்?

மாணிக்கம் :—அம்மா! நான் அரை அணுவுக்கு வாங்குவேன். மீதம் உள்ள அரை அணுவுக்கு ஒரு பம்பரம் வாங்கப்போகிறேன்.

தாயார் :—கு ழ ந் தா ய்! என்னிடத்தில் சில்லரை இல்லேயே. ஒரு ரூபாயாகத்தான் இருக்கிறது. அதை மாற்றிச் செலவு செய்ய உனக்குத் தெரியுமா?

மாணிக்கம்:—அம்மா! எனக்குத் தெரியும். அப்பாகூட ஒரு நாள் கடைக்குப் போயிருந்தேன். சில்லரை மாற்ற எனக்கு அவர் சொல்லிக் கொடுத்தார்.

ஒரு ரூபாயில் பாதி அரை ரூபாய். ஆகையால் ஒரு ரூபாய்க்கு இரண்டு அரை ரூபாய். அரை ரூபாயில் பாதி கால் ரூபாய். கால் ரூபாயில் பாதி அரைக்கால் ரூபாய். அரைக் கால் ரூபாயில் பாதி ஒரு அணு. ஒரு அணுவில்

பாதி அரை அணா. அரையணாவில் பாதி காலணா. காலணாவுக்கு மூன்று தம்பிடி.

தாயார் :—குழந்தாய்! ஒரு ரூபாய்க்கு எத்தனை அணா தெரியுமா?




மாணிக்கம் :—அம்மா! ஒரு ரூபாய்க்குப் பதினாறு அணா.

தாயார் :—குழந்தாய்! நாணயங்கள் ஒவ்வொன்றும் என்ன உலோகத்தால் செய்யப்பட்டவை தெரியுமா?

மாணிக்கம் :—அம்மா! தெரியும். பழைய ஒரு ரூபாய், அரை ரூபாய், கால் ரூபாய், இவை களெல்லாம் வெள்ளி நாணயங்கள். அரைக் கால் ரூபாய், ஒரு அணு, அரையணு முதலிய நாணயங்கள் நிக்கல் என்ற உலோகத்தால் செய்யப்பட்டவை. காலணு, தம்பிடி இவைக ளெல்லாம் செம்பு நாணயங்கள். புதிய ரூபாய், அரை ரூபாய், கால் ரூபாய் நாணயங்கள் இரும்பும் நிக்கலும் சேர்ந்த கலப்பால் செய்யப் படுகின்றன.

தாயார் :—சரி! இந்த ரூபாயை எடுத்துக் கொண்டுபோய்ச் சில்லரை மாற்றி, எல்லா நாணயமும் இருக்கும்படி வாங்கிவா.

மாணிக்கம் :—அம்மா! அரை ரூபாய் ஒன்று, கால் ரூபாய் ஒன்று, அரைக்கால் ரூபாய் ஒன்று, ஒரு அணு ஒன்று, அரை அணு ஒன்று, கால் அணு ஒன்று, பைசா மூன்று வாங்கி வருகிறேன்.

தாயார் :—பிறகு உனக்கு ஒரு அணுத் தருகிறேன். இந்தக் கணக்கை எல்லாம் நீ சரியாய்ச் சொன்னதால், உனக்கு ஒரு அணு கூடத் தருகிறேன்.

மாணிக்கம் :—அம்மா! மிகவும் மகிழ்ச்சி யடைந்தேன். கடைக்குப் போய்வருகிறேன்.

### புதுச்சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| மிட்டாய் | அணு | பம்பரம் | சில்லரை |
| செலவுசெய் | மாற்றி | ரூபாய் | தம்பிடி |
| செம்பு | உலோகம் | வெள்ளி | நிக்கல் |
| | கலப்பு | கணக்கு | |

### பயிற்சி

I விடை எழுது :—

*1.* அரை ரூபாய்க்கு எத்தனை அணு? எத்தனை அரையணு?

2. புதிய ரூபாய்க்கும், பழைய ரூபாய்க்கும் என்ன வித்தியாசம்?

II முதல் வரிசையில் உள்ளவற்றிற்குப் பொருத்தமான சொல்லை இரண்டாம் வரிசையிலிருந்து சேர்த்துப்படி :—

| | |
|---|---|
| ரூபாய் | செம்பு |
| இரண்டணு | இரும்பு-நிக்கல் கலவை |
| காலணு | நிக்கல் |

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் ... காப்பக நூலகம் ★ சென்னை-600 008.
13352
TB 0312



## 27. கோவில்கள்

நாள்தோறும் காலையிலும் மாலையிலும் கடவுளை வணங்கவேண்டும். நாம் செய்யும் ஒவ்வொரு வேலையையும், கடவுள் நமக்குத் தெரியாமலே அறிந்து வருகிறார். நாம் செய்யும் கெட்ட செயலுக்குத் தகுந்தபடி நம்மைத் தண்டிக்கிறார். நல்ல செயல்களைச் செய்தால் அவர் நம்மைக் காப்பாற்றுவார். ஆகையால் நாள்தோறும் கடவுளை வணங்கி, நல்ல செயலையே செய்து வரவேண்டும்.

கடவுளை வணங்குவதற்கு இடமாகக் கோவில்கள் கட்டிவைக்கிறார்கள். கோவிலுக்குப் போனால் நமக்கு ஒருவித உணர்ச்சி ஏற்படு

கிறது. அதனுலேயே நாம் அச்சத்தோடும் பணிவோடும் கடவுளை வணங்குகின்ருேம்.

ஒவ்வொரு மதத்தினரும், ஒவ்வொரு விதமாகக் கோவிலைக் கட்டிக்கொள்கிருர்கள். இந்துக்கள் கோவிலின் படத்தைப் பார். இதற்குப் பெரிய கோபுரவாசல் உண்டு. இதன் வழியாகச் சென்று உள் வீதியைக் கடந்து, உள்ளே போனுல் கடவுள் சிலை இருக்கும். சிவன் கோவிலில் முக்கிய சிலைக்குச் சிவலிங்கம் அல்லது சிவன் என்றும், திருமால் கோவிலில் முக்கிய சிலைக்குப் பெருமாள் அல்லது திருமால் என்றும் பெயர். இந்தக் கோவில்களில் சில நாட்களில் திருவிழாக்கள் நடக்கும்.



திருவிழாக்கள் நடக்கும்போது, அநேக மக்கள் கோவிலுக்கு வருவார்கள்.

இது முஸ்லிம்களின் கோவில். இதை மசூதி என்பார்கள். இதில் கோபுர வாசல் கிடையாது. கூடாரங்கள் போலவும், தூண்கள் போலவும் மேல் கட்டடங்கள் இருக்கும். கூடாரம் போன்ற நடுக் கட்டடத்தின் மேல்

பிறைச் சந்திரன் அடையாளம் வைப்பார்கள். வெள்ளிக்கிழமை தோறும் மசூதியில் தொழு வதை முஸ்லிம்கள் மிக அவசியமாகக் கருது கிருர்கள். இவர்களுக்கு ரம்ஜான், பக்ரீத் என்ற முக்கியமான பண்டிகைகள் உண்டு.



இந்தக் கோவிலைப் பார். இது ஒரே கோபுரம் போல் உயர்ந்து, மேலே சிலுவை நிறுத் தப்பட்டிருக்கிறது. இது தான் கிறிஸ்தவர்கள் தொழும் கோவில். இதற்கு மாதா கோவில் என்று பெயர். கிறிஸ் தவர்கள் ஞாயிற்றுக் கிழமைதோறும் மாதா கோவிலுக்குப் போவார்கள். இவர்களுக்குக் கிறிஸ்துமஸ், ஈஸ்டர் முதலிய பண்டிகைகள் உண்டு.

மேற்கண்ட மூன்றுவிதக் கோவில்கள் தவிர, இன்னும் பலவிதக் கோவில்களும் உண்டு. ஆனுல் யார் எந்தப் பெயர் கொடுத்து வணங்கிஞலும் கடவுள் ஒருவர்தான். நாம் எந்த விதத்தில் தொழுதபோதிலும் கடவுள் நம்மைக் காப்பார்.

கடவுளை நம்பினேர் கைவிடப்படார்.

### புதுச்சொற்கள்

| | | |
|---|---|---|
| தெரியாமலே | செயல் | கெட்ட |
| உணர்ச்சி | அச்சம் | பணிவு |
| கோபுரவாசல் | சிவலிங்கம் | திருமால் |
| மசூதி | கூடாரம் | பண்டிகை |
| பிறைச்சந்திரன் | சிலுவை | தொழுவதை |
| கைவிடப்படார் | அடையாளம் | வணங்கி |

### பயிற்சி

I விடை எழுது :

1. நாம் ஏன் நல்ல செயல்களையே செய்ய வேண்டும்?

2. இந்துக்களின் கோவில்களில் என்ன முக்கிய சிலைகள் இருக்கும்?

3. முஸ்லிம்களின் பண்டிகைகளில் இரண்டு சொல்லு.

4. கிறிஸ்தவர் என்றைக்கு முக்கியமாக மாதா கோவிலுக்குப் போவார்கள்?

II பொருத்தமான சொற்களை இணைத்துக் கூறு:

| | |
|---|---|
| இந்துக்கள் | ரம்ஜான் |
| முஸ்லிம்கள் | கிறிஸ்துமஸ் |
| கிறிஸ்தவர்கள் | நவராத்திரி. |



# 28. பள்ளிக்கூடம் போதல்

முருகன் :—வேலா ! பள்ளிக்கூடம் போக லாம், வருகிருயா ?

வேலன் :—முருகா ! அதற்குள் நேரமாய் விட்டதா ?

முருகன் :—நேற்று, நீ கொஞ்சம் நேரம் கழித்து வந்தாயே, உபாத்தியாயர் கோபிக்க வில்லையா ?

வேலன் :—ஆம் ! ஆம் !! இன்று சரி யான நேரத்திற்குப் போய்ச் சேருவோம்.

முருகன் :—வேலா ! நேற்று நடந்த பாடங்களை நீ வீட்டில் படித்தாயா ?

வேலன் :—முருகா! நான் படிக்கவில்லையே. தூக்கம் வந்தது. தூங்கிவிட்டேன்.

முருகன் :—வேலா ! உபாத்தியாயர் பழைய பாடம் கேட்பாரே. அப்பொழுது என்ன செய்வாய்?

வேலன் :—முருகா ! நேற்று எனக்குத் தலைவலியாய் இருந்தது ; அதனால் படிக்கவில்லை என்று சொல்லுவேன்.

முருகன் :—அப்படிச் சொல்வது பொய்யல்லவா ? உபாத்தியாயர் பொய் சொல்லவே கூடாது என்று எத்தனை தடவை சொல்லியிருக்கிறார் ?

வேலன் :—ஆமாம் ! பொய் சொல்லக் கூடாது. அது நியாயம்தான். ஆனால் பாடம் படிக்கவில்லை என்று அடிபடலாமா ?

முருகன் :—வேலா! நீ உபாத்தியாயரிடம் சென்று, 'ஐயா! நான் படிக்கவில்லை, நேற்று இரவு தூங்கிவிட்டேன்' என்று உண்மையைச் சொல்லுவதுதான் நல்லது.

வேலன் :—அப்படிச் சொன்னால் உபாத்தியாயர் அடிக்கமாட்டாரோ?

முருகன் :—நம் உபாத்தியாயர் யாரையும் காரணமில்லாமல் அடிக்கமாட்டார். தகுந்த குற்றம் இருந்தால்தானே அடிப்பார். நீ உண்மையைச் சொன்னால் மன்னித்து, இனி மேல் நன்றாய்ப் படித்து வா என்று சொல்லு வார்.

வேலன் :—முருகா! அப்படியானால் நான் உண்மையைத்தான் சொல்லப் போகிறேன். இதோ பள்ளிக்கூடம் வந்து சேர்ந்துவிட்டோம்.

முருகன் :—வேலா! அதோ பார்! சேவகன் மணி அடிக்க வருகிறான். நாம் சரியான நேரத்திலேயே வந்துவிட்டோம்.

வேலன் :—ஆம்! ஆம்!! அதோ உபாத்தி யாயரும் வந்துவிட்டார்.

இருவரும் தங்கள் வகுப்பிற்குச் சென்றார் கள். முருகன் நன்றாகப் பாடம் ஒப்பித்தான். வேலன் படிக்காததனால் ஒப்பிக்கவில்லை. ஆனால் உபாத்தியாயரிடம் உண்மையைக் கூறினான். உபாத்தியாயரும் அவனை மன்னித் தார். அன்று முதல் வேலனும் நன்கு படித்துக் கெட்டிக்காரன் ஆனான். ஆகையால் எப்போ தும் உண்மையே பேச வேண்டும். சரியான நேரத்தில் பள்ளிக்கூடம் போகவேண்டும்.

### புதுச்சொற்கள்

| | | |
|---|---|---|
| பழையபாடம் | தலைவலி | தடவை |
| அடிபடலாமா | குற்றம் | மன்னித்து |
| ஒப்பித்தான் | | கெட்டிக்காரன் |

### பயிற்சி

I விடை எழுது:

1. ஆசிரியரிடம் ஏன் பொய் சொல்லக் கூடாது?

2. வேலன் எவ்வாறு கெட்டிக்காரன் ஆனான்?

II பின்வரும் சொற்களுக்கு எதிர்ச் சொற்கள் எழுது:

சரியான ; பொய் ; ஒப்பித்தான்.

# 29. படப் பயிற்சி—IV

[சிங்கமும் சுண்டெலியும்]

பின்வரும் படங்களைப் பார்த்துக் கதையைச் சொல்லு:—





# 30. பூந்தோட்டம்

பிள்ளைகளே! நீங்கள் பூந்தோட்டத்தைப் பார்த்திருக்கிறீர்களா? அதில் பலவிதப் பூஞ் செடிகள் இருக்கும். பலவிதமான பூங்கொடி களும் மரங்களும் அதில் உண்டு.

மல்லிகை :— மல்லிகைப்பூ, வெண்மை நிறமாய் இருக்கும். அது மிகவும் வாசனை உடையது. மல்லிகைப்பூவை மாலையாகத் தொடுக்கலாம். மாலையைக் கழுத்தில் போட் டுக் கொள்வார்கள். இரண்டு இரண்டாய்த் தொடுத்துத் தலையில் அணிந்து கொள்வதும் உண்டு.

ரோஜா :— ரோஜாப்பூ, சிவப்பு, வெண்மை முதலிய பல நிறமுள்ளது. இது வாசனையிலும் அழகிலும் சிறந்தது. ரோஜா மாலை வெகு அழகாய் இருக்கும். ரோஜா மாலையைக் கடவுளுக்கும் பெரியோர்களுக்கும் போடுவார்கள். ரோஜாவைப்பற்றி நீங்கள் படித்த விஷயங்களைச் சொல்லுங்கள்.



முல்லை :— முல்லைப்பூ, மல்லிகைப் பூவைப் போலவே சிறியதாயும் வெண்மையாயும் இருக்கும். இதுவும் வாசனையுள்ளது. முல்லைப் பூவையும் மல்லிகையைப் போலவே அணிந்து கொள்ளலாம்.



சம்பங்கி :— இதன் பூ சற்று மஞ்சள் நிறமாய்ச் சிறியதாய் இருக்கும். இதுவும் நல்ல வாசனை உள்ளது. இதை நூலில் கோத்து அணிவார்கள். சம்பங்கிப் பூவிலிருந்து வாசனை எண்ணெய் காய்ச்சுவார்கள். சம்பங்கித் தைலம் கண்ணுக்குக் குளிர்ச்சி தரும்.

பவள மல்லிகை :—இதனைப் பாரிஜாதம் என்றும் சொல்லுவார்கள். இந்தப் பூவின் காம்பு பவளம் போன்ற சிவப்பு நிறமானது. இதழ்கள் மல்லிகைப் பூவைப் போல் வெண்மையாய் இருக்கும். இதுவும் வாசனை உள்ளது. இதனை நூலில் கோத்துக் கடவுளுக்கு அணிவார்கள்.



### புதுச்சொற்கள்

| | | |
|---|---|---|
| பூந்தோட்டம் | பூஞ்செடி | பூங்கொடி |
| சம்பங்கி | சற்று | கோத்து |
| அணிவார்கள் | வாடி | பவளமல்லிகை |
| தொடுத்து | பவளம் | இதழ்கள் |

### பயிற்சி

I விடை எழுது :

1. மல்லிகைப் பூவின் நிறமென்ன?
2. சம்பங்கிப்பூ எப்படி இருக்கும்?
3. பவள மல்லிகையின் மற்ருெரு பெயர் என்ன ?

II பின் வரும் எழுத்துக்களைப் பொருத்தமாக மாற்றிச் சொற்களாக்கு :—

கைலிமல் ; பூஜாரோப் ; சங்கிம்ப ; ஜாம்பாரித.



## 31. கிளி

பச்சைக்கிளியே வா வா
பாலுஞ்சோறு முண்ணவா
கொச்சிமஞ்சள் பூசவா
கொஞ்சிவிளை யாடவா. 1.

கவலையெல்லாம் நீங்கவே
களிப்பெழுந்து பொங்கவே
பவழவாய் திறந்துநீ
பாடுவாயோ தத்தம்மா. 2.

பையப்பையப் பறந்துவா
பாடிப்பாடிக் களித்துவா
கையில்வந் திருக்கவா
கனியருந்த ஓடிவா. 3.

—தேசிக விநாயகம்பிள்ளை.



## 32. சுத்தம் சோறு போடும்

தாய்:—மணியா! நீ பள்ளிக்கூடம் போகும் நேரம் ஆகவில்லையா? இன்னும் விளையாடிக் கொண்டிருக்கிறாயே!

மகன்:—அம்மா, கொஞ்ச நேரம் கழித்துப் போகலாம்.

தாய்:—இந்த உடையைப் போட்டுக் கொண்டா பள்ளிக்கூடம் போகப் போகிறாய்?

மகன்:—ஆம், அம்மா! எனக்கு வேறு உடை இல்லையே!

தாய்:—இது ஏன் இவ்வளவு அழுக்காய் இருக்கிறது?

மகன் :—அம்மா ! நான் விளையாடும்போது ஒரு பையன் சண்டைக்கு வந்தான். அவனோடு சண்டை செய்ததில் மண்ணில் விழுந்து புரண்டேன். அதனால் உடை அழுக்காய் விட்டது.

தாய் :—இந்த வெயில் நேரத்தில் விளையாடுவது தேகத்திற்குக் கெடுதல் செய்யும். படிக்கும் பிள்ளைகளுக்கு ஏற்றதும் இல்லை. விளையாடும்போது புழுதியில் புரள்வதும், கெட்ட பிள்ளைகளோடு சண்டை செய்வதும் உனக்குத் தக்க செயல்கள் அல்ல.

மகன் :—விளையாடும்போது புழுதிபடாதா?

தாய் :—கை கால் எல்லாம் புழுதியாய் விட்டதே. உடை மிகவும் அழுக்காக இருக்கிறது. இப்பொழுது அவசரப்பட்டு, சாப்பிட்டு விட்டுப் போக வேண்டுமென்கிறாய்.

மகன் :—எப்படியாவது பள்ளிக்கூடத்துக்குப் போக வேண்டுமே, அம்மா !

தாய் :—பள்ளிக்கூடத்துக்கு இப்படியே போகலாமா ? உபாத்தியாயர் உன் உடம்பையும் உடையையும் பார்த்து ஒன்றும் சொல்ல மாட்டாரா ?

மகன் :—அம்மா ! நேற்றுக்கூடக் கோபித்துக் கொண்டார். ‘ இனிமேல் இப்படி வராதே ’ என்றார்.

தாய் :—பார்த்தாயா ! உன் உபாத்தியாயர் கோபித்துக் கொண்டும் நீ மறுபடியும் புழுதியில் போய் விளையாடினுயே. கை கால்களில் உள்ள புழுதியைத் தேய்த்துக் கழுவாமல் நீ சாப்பிடக்கூடாது. அப்படிச் சாப்பிட்டால் அடிக்கடி நோய் வரும். இந்த மாதிரி உடையைக் கட்டிக் கொள்வது நோய்க்கு இடம் கொடுப்பதாகும். இதனுல் தான் உனக்கு அடிக்கடி தலைவலி, காய்ச்சல் முதலிய நோய்கள் வருகின்றன.

மகன் :—அப்படியானுல் எனக்கு இன்று சாப்பாடு இல்லையா அம்மா ?

தாய் :—சுத்தமாய் இருந்தால் தான் சாப்பாடு கிடைக்கும். ஆகையால் நீ இப்பொழுதே போய், குளிர்ந்த நீரில் நன்ருய்த் தேய்த்துக் குளித்துவிட்டு வா. வேறு நல்ல உடை தருகிறேன். உடுத்திக் கொண்டு சாப்பிட்டு விட்டுப் பள்ளிக்கூடம் போகலாம்.

மகன் :—அம்மா ! இனிமேல் தக்கபடி நடந்து கொள்ளுகிறேன். உபாத்தியாயர் கோபித்ததையும் தாங்கள் சொன்னதையும் மறக்கவே மாட்டேன்.

புதுச்சொற்கள்

| | | |
|---|---|---|
| பொறுத்து | அழுக்காய் | புரண்டேன் |
| தக்க | புழுதி | காய்ச்சல் |
| மறக்கமாட்டேன் | குளித்து | உடுத்தி |

## பயிற்சி

I விடை எழுது:—

1. மகனுடைய உடையும் உடம்பும் ஏன் அழுக்காகி விட்டன?
2. உடலை அழுக்காக வைத்திருப்பது ஏன் கெடுதல்?

II பின்வரும் சொற்களைச் சரியானபடி மாற்றி அமைத்து வாக்கியமாக்கு :—

1. நோய் உண்டாகும் உடல் இருந்தால் அழுக்காக.
2. இருந்தால்தான் கிடைக்கும் சாப்பாடு சுத்தமாக.



## 33. நான்கு திருடர்கள்

ஒருநாள் இரவில் நான்கு திருடர்கள் ஒரு கிழவியின் வீட்டில் திருடச் சென்றார்கள். ஆனால் கிழவியின் வீட்டுக்குள் அவர்களால் நுழைய முடியவில்லை. அவர்கள் பல தந்திரங் களைச் செய்தும் பயனில்லாது போய்விட்டது. கடைசியாக ஒரு திருடன் கிழவியின் எருமை ஒன்றை அவிழ்த்துவிட்டான். எருமையின் கதறலைக் கேட்டுக் கிழவி விழித்துக் கொண் டாள்; வெளியே வந்து பார்த்தாள். உடனே திருடர்கள் அவளைப் பிடித்து ஒரு மரத்துடன்

சேர்த்துக் கட்டினூர்கள். தங்கள் ஆயுதங்களை மரத்தினடியில் வைத்துவிட்டு அவர்கள் வீட்டுக்குள் சென்றூர்கள்.

திருடர்கள், இரவு முழுவதும் கிழவியின் வீட்டிலிருந்த சொத்துக்களைச் சுமந்து சென்று ஓரிடத்தில் மறைத்து வைத்தார்கள். காலையில் அவரவர் வீட்டுக்குச் சென்று களைப்பினூல் உறங்கிவிட்டார்கள். மரத்தினடியில் போட்ட ஆயுதங்களை எடுத்துச் செல்ல மறந்து போனூர்கள்.

மறுநாள் போலீஸ்காரர்கள் அவ்வழியே வந்தார்கள்; செய்தியை அறிந்தார்கள்; கிழவியை அவிழ்த்து விட்டார்கள். மரத்தினடியில் கிடந்த ஆயுதங்களைக் கைப்பற்றிக்கொண்டார்கள். பிறகு ஊராரிடம் துப்பு விசாரித்து, அந்த நான்கு திருடர்களையும் பிடித்தார்கள். திருடர்கள் நீதிபதியின் முன்னே நிறுத்தப்பட்டார்கள்.

நீதிபதி திருடர்களை விசாரணை செய்தார். ஆனூல் அவர்கள் தங்களுடைய குற்றத்தை ஒப்புக்கொள்ளவில்லை. அவர்கள் திருடியதைப் பார்த்தவர்களும் இல்லை. ஆகையால் அவர்களைத் தண்டிக்க முடியவில்லை.

கடைசியில் நீதிபதி ஒரு உபாயம் செய்தார். திருடர்களுடைய ஆயுதங்களைக் கச்சேரி வாயிலில் போட்டு வைக்கும்படி போலீஸ்காரருக்கு அவர் ரகசியமாக உத்தரவிட்டார். பிறகு திருடர்களைப் பார்த்து, " நீங்கள் குற்றமில்லாதவர்கள். உங்களை விடுதலை செய்கிறேன், " என்று கூறினர்.

திருடர்கள் மகிழ்ச்சியுடன் கச்சேரியை விட்டு வெளியே வந்தார்கள். வாயிலில் தங்களுடைய ஆயுதங்கள் இருந்ததைக் கண்டார்கள். சுற்றுமுற்றும் யாரும் இல்லை. உடனே ஒவ்வொருவரும் தம் தம் ஆயுதங்களை எடுத்துக் கொண்டார்கள். இதை மறைவிலிருந்து பார்த்த போலீஸ்காரர்கள், உடனே அவர்கள் மேல் பாய்ந்து பிடித்தார்கள்; அவர்களை மறுபடியும் நீதிபதியிடம் அழைத்துச் சென்றார்கள்.

நீதிபதி திருடர்களைப் பார்த்து, " இந்த ஆயுதங்கள் கிழவியின் வீட்டு மரத்தினடியில் கிடந்தவை. இவை உங்களுடைய ஆயுதங்கள் என்பதை நீங்கள் காட்டிவிட்டீர்கள். ஆகையால் நீங்களே திருடர்கள்," என்று கூறினர். திருடர்கள் தலைகுனிந்து உண்மையை ஒப்புக் கொண்டார்கள். இரண்டு வருஷகாலம் அவர்கள் சிறைவாசம் செய்யவேண்டுமென்று நீதி

பதி தீர்ப்பளித்தார். கிழவியின் சொத்துக்கள் அவளுக்குத் திருப்பிக் கொடுக்கப்பட்டன.

### புதுச்சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| தந்திரம் | களைப்பினால் | தண்டிக்க | கச்சேரி |
| விழித்து | உறங்கி | உபாயம் | மறைவு |
| துப்பு | கைப்பற்றி | ரகசியமாக | தலைகுனி |
| விடுதலை | சொத்துக்கள் | சிறைவாசம் | விசாரணை |

### கேள்விகள்

1. கிழவியின் வீட்டில் நுழைய ஒரு திருடன் என்ன தந்திரம் செய்தான்?
2. திருடர்கள் திருடிய பிறகு என்ன தவறு செய்தார்கள்?
3. முதலில் நீதிபதி திருடர்களை ஏன் தண்டிக்கவில்லை?
4. நீதிபதி என்ன உபாயம் செய்தார்?



## 34. கிராம அதிகாரிகள்

கண்ணன் :—மாமா! இன்று காலையில் கிராமத்துக்குப் போய்வருவோம் என்றீர்களே. இப்போது போகலாமா ?

மாமன் :—அப்பா! உன் தகப்பனாரிடம் கேட்டாயா ? அவர் போகச்சொன்னால் நீ வரலாம்.

கண்ணன் :—மாமா! நான் கேட்டேன். ‘ போய்வா ’ என்றார்.

மாமன் :—அப்படியானால் சரி! போகலாம் வா. உன்னால் அதிக தூரம் நடக்க முடியாது.

வண்டியிலே போவோம். கிராமத்துக்கு அருகிலே போய் இறங்கி நடந்து போவோம்.

கண்ணன்:—அப்படியே மாமா! இரண்டு பக்கங்களிலும் பார்த்துக்கொண்டே மெல்லப் போகவேண்டும்.

மாமன் :—இதோ கிராமத்துக்கு அருகிலே வந்துவிட்டோம். தோட்டங்களும் வயல்களும் வழியெல்லாம் இருப்பதைப் பார்.

கண்ணன் :—மாமா! வயல் நடுவிலே ஒருவர் சங்கிலியைப் பிடித்துக் கொண்டு போகிறுர். அதோ இன்னெருவர் தடியைக் கையில் வைத்துக்கொண்டு அவருக்கு உதவி செய்கிறுர். இவர்கள் யார்? இவர்கள் என்ன செய்கிறுர்கள் ?

மாமன் :—கண்ணு! சங்கிலி வைத்துக் கொண்டு அளப்பவர் தான் இந்தக் கிராமத்துக் கணக்கப்பிள்ளை. அவரைக் கர்ணம் என்றும் சொல்வதுண்டு. அவர்கூட இருப்பவர் தான் தண்டல்காரர். இவர்கள் இங்கே நிலங்களை அளக்கிறுர்கள்.

கண்ணன் :—மாமா! இவர்களுக்கு வேறு வேலை உண்டா ? இவ்வளவுதானு ?

மாமன்:—கணக்கப்பிள்ளை நாம் பயிர் செய்யும் நிலங்களை அளந்து பார்ப்பார். நம் நிலத்

தில் என்ன தானியம் பயிர் செய்கிறோம் என்று எழுதி வைப்பார். நாம் கொடுக்க வேண்டிய வரிகள் இவ்வளவு என்று எழுதி, கிராம மணியக்காரருக்கு வேண்டிய உதவிகளைச் செய்வார். தண்டல்காரர் கணக்கப்பிள்ளைக்கு உதவியாக அவர் சொன்ன வேலைகளைச் செய்வார்.

கண்ணன் :— மாமா! மணியக்காரர் என்று சொன்னீர்களே; அவருக்குக் கிராமத்தில் என்ன வேலை ?

மாமன் :—கண்ணு! நாம் கிராமத்துக்குள் போகும்போது அவரைப் பார்ப்போம். அப்போது அவரைப்பற்றிப் பேசுவோம்.

கண்ணன் :—மாமா ! இதோ கிராமத்துக்குப் பக்கத்தில் ஒரு பெரிய கிணறு இருக்கிறதே ! நம் ஊரில் இவ்வளவு பெரிய கிணறு கிடையாதே ! இதில் மக்கள் தண்ணீர் எடுக்கிறார்கள்.

மாமன் :—இதுதான் கிராமக் கிணறு.

கண்ணன் :—அதோ ஒரு சிறு வீடு தனியாய் இருக்கிறதே ! திண்ணையிலும், வெளியிலும் மக்கள் கூட்டமாக இருக்கிறார்கள். ஒருவர் உட்கார்ந்து கொண்டிருக்கிறார். திண்ணைப் பக்கத்தில் இரண்டு பேர் நிற்கிறார்கள்.

மாமன் :—கண்ணு! இதுதான் கிராமச் சாவடி. உட்கார்ந்து இருப்பவர்தான் இவ்வூர் கிராம அதிகாரி. இவரை கிராம முன்சீப் அல்லது மணியக்காரர் என்று சொல்லுவார்கள். இவர் இப்போது கிராம மக்களுக்குள் ஏற்பட்ட ஒரு வழக்கை விசாரிக்கிருர். வெளியே தடியோடு நிற்பவர் தலையாரி.

கண்ணன் :— இவர்களுக்கு இன்னும் என்ன வேலை உண்டு ?

மாமன்:—கிராம அதிகாரி, கிராமத்தில் பிறக்கும் குழந்தைகளின் கணக்கு எழுதுவார். இறந்தவர்கள் பெயரைப் பதிவுசெய்வார். சர்க்கார் தீர்வையை வசூல் செய்வார்.

கண்ணன் :— தலையாரிக்கு என்ன வேலை?

மாமன் :—மணியக்காரர் சொல்லும் வேலையைத் தலையாரி செய்வார். இரவில் ஊரைக் காவல் செய்வார்.

கண்ணன் :—மாமா! இந்த கிராமத்தில் இன்று தங்கிவிட்டு, நாளைக்கு நம் ஊருக்குப் போகலாமா ?

மாமன் :—அப்படியே செய்யலாம்.

## புதுச்சொற்கள்

| | | |
|---|---|---|
| சங்கிலி | கணக்கப்பிள்ளை | கர்ணம் |
| தானியம் | தண்டல்காரர் | மணியக்காரர் |
| சாவடி | கிராம முன்சீப் | தலையாரி |
| தீர்வை | வசூல் | தங்கிவிட்டு |

## பயிற்சி

I விடை எழுது :—

1. கணக்கப் பிள்ளையின் வேலைகள் என்ன ?

2. தண்டல்காரர் கணக்கப் பிள்ளைக்கு எப்படி உதவி செய்வார் ?

3. கிராமமுன்சீப்பின் வேலைகளைச் சொல்லு.

II பொருத்தமான சொற்களை இரண்டாம் வரிசையிலிருந்து எடுத்து முதல் வரிசைச் சொற்களுடன் சேர் :—

| | |
|---|---|
| மணியக்காரர் | ஊர்க்காவல் |
| கணக்கப்பிள்ளை | வழக்கு விசாரணை |
| தலையாரி | வரிக்கணக்கு எழுதுதல் |

# 35. வேடிக்கைப் பாடல்கள்

1. தண்ணீர் வைப்பது பானை
சண்டை செய்வது சேனை
பால் குடிக்கும் பூனை
மன்னர் ஏறுவது யானை

2. படுக்க உதவும் பாய்
பழுக்கா திருப்பது காய்
வீட்டைக் காப்பது நாய்
வேண்டும் தெய்வம் தாய்

3. கிழமையில் கூடும் சந்தை
கிழிசல் துணியே கந்தை
மாடுகள் கூட்டம் மந்தை
மறவாத் தெய்வம் தந்தை

4. கழனி உழுவது நெல்லுக்கு
காக்கை ஓடும் கல்லுக்கு
மூக்கில் அணிவது புல்லக்கு
மூத்தோர் ஏறுவர் பல்லக்கு

5. ஆடித்திரியும் மயில்
பாடித் திரியும் குயில்
அடித்துக் காயும் வெயில்
படித்துப் பாடம் பயில்.

# ஆத்திசூடி

ஆத்திசூடி அமர்ந்த தேவனை
ஏத்தி ஏத்தித் தொழுவோம் யாமே.

1. அறம் செய விரும்பு.
2. ஆறுவது சினம்.
3. இயல்வது கரவேல்.
4. ஈவது விலக்கேல்.
5. உடையது விளம்பேல்.
6. ஊக்கமது கைவிடேல்.
7. எண் எழுத்து இகழேல்.
8. ஏற்ப(து) இகழ்ச்சி.
9. ஐயம் இட்டு உண்.
10. ஒப்புர ஒழுகு.
11. ஓதுவ(து) ஒழியேல்.
12. ஔவியம் பேசேல்.
13. அஃகம் சுருக்கேல்.
14. கண்(டு) ஒன்று சொல்லேல்.
15. ஙனி நீராடு.
16. ஞயம்பட உரை.
17. இணக்கம் அறிந்(து) இணங்கு.
18. தந்தை தாய்ப்பேண்.
19. நன்றி மறவேல்.
20. உத்தமனா யிரு.

# உலகநீதி

ஓதாமல் ஒருநாளும் இருக்கவேண்டாம்.
ஒருவரையும் பொல்லாங்கு சொல்லவேண்டாம்.
மாதாவை ஒருநாளும் மறக்கவேண்டாம்.
வஞ்சனைகள் செய்வாரோ(டு) இணங்கவேண்டாம்.
போகாத இடந்தனிலே போகவேண்டாம்.
அடுத்தவரை ஒருநாளும் கெடுக்கவேண்டாம்.
தனந்தேடி உண்ணாமல் புதைக்கவேண்டாம்.
தருமத்தை ஒருநாளும் மறக்கவேண்டாம்.
கொலைகளவு செய்வாரோ(டு) இணங்கவேண்டாம்.
கற்றவரை ஒருநாளும் பழிக்கவேண்டாம்.
வார்த்தைசொல்வார் வாய்பார்த்துத் திரியவேண்டாம்.
மதியாதார் தலைவாசல் மிதிக்கவேண்டாம்.
மூத்தோர்சொல் வார்த்தைதனை மறக்கவேண்டாம்.
முன்கோபக் காரரோ(டு) இணங்கவேண்டாம்.
சேராத இடந்தனிலே சேரவேண்டாம்.
செய்நன்றி ஒருநாளும் மறக்கவேண்டாம்.
பிணைஇட்டுத் துணைபோய்நீ நிற்கவேண்டாம்.
காணாத வார்த்தைகளைக் கட்டுரைக்கவேண்டாம்.
புண்படவே வார்த்தைகளைச் சொல்லவேண்டாம்.
வாதாடி வழக்கழிவு சொல்லவேண்டாம்.
திறம்பேசிக் கலகமிட்டுத் திரியவேண்டாம்.
இறந்தாலும் பொய்தன்னைச் சொல்லவேண்டாம்.
தெய்வத்தை ஒருநாளும் மறக்கவேண்டாம்.

---

-600 008.

வி. சூ. சுவாமிநாதன்
பிரசுரகர்த்தர்

மேலக்கோபுரத் தெரு, மதுரை :: பிரான்ஸிஸ் ஜோஸப் தெரு, சென்னை

பதிப்புரிமை]

[விலை ரூ. 0—6—0